NST Campus

# மூன்றாம் தவணைப் பரீட்சை - 2026

| தரம் 06 | நாடகமும் அரங்கியலும | 1.30 மணித்தியாலம் |
|---|---|---|

சுட்டிலக்கம் : ........................ புள்ளிகள்

➢ **சரியான விடையினைத் தெரிவு செய்து கோடிடுக**

01. ஒரு பாடலுக்காக சுருதி எவ்வாறு அழைக்கப்படும்.
    1. பிதா 2. மாதா 3. அண்ணா 4. மாமா
02. நாட்டார் விளையாட்டினூடாக ஏற்படுத்தக் **கூடாதது.**
    1. ஒற்றுமை 2. மகிழ்ச்சி 3. பொறாமை 4. கூட்டுணர்வு
03. படைப்பாக்கம் செய்வதற்கு நடிகனுக்கு அவசியமானது
    1. எழுத்தாற்றல் 3. பேச்சாற்றல்
    2. கற்பனை 4. ஆடும் திறன்
04. அசைவுகள் எத்தனை வகைப்படும்
    1. 2 2. 3 3. 4 4. 5
05. கூத்தினைப் பழக்குபவர்
    1. அண்ணாவியார் 2. நெறியாளர் 3. தயாரிப்பாளர் 4. கட்டியக் காரன்

➢ **சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் அடையாளமிடுக**

06. நாடகத்தின் முதன்மைப் படைப்பாளி நடிகன் ஆவான். (  )
07. சித்திரிப்புக்கள் ஐந்து வகைப்படும். (  )
08. ஆடலும் பாடலும் இணைந்த கலைவடிவம் கூத்து ஆகும். (  )
09. பார்ப்போரின் கற்பனையைத் தூண்டுகின்ற இடம் அரங்கவெளியாகும். (  )
10. கும்மி ஒரு நவீன கலைவடிவமாகும். (  )
11. வேட முகமும் வேட உடையும் ஆகார்ய அபிநயத்தில் உள்ளடக்கப்படுகின்றது. (  )
12. நாட்டார் பாடல் வடிவங்களில் சினிமாவும் ஒன்றாகும். (  )
13. தவில் என்ற இசைக்கருவி தோற்கருவிகளுள் உள்ளடங்கும். (  )
14. குரலை இனிமையாக்க உடற்பயிற்சி அவசியமாகும். (  )
15. அரங்க விளையாட்டுக்களில் ஆடும் வீடும் ஒன்றாகும். (  )

➢ **தரப்பட்ட சொற்களிலிருந்து சரியான விடையைத் தெரிவு செய்து எழுதுக.**

| பழந்தமிழ் சொல், நாடகமும், போலச் செய்தல், வட்டக்களரி, நாட்டிய சாஸ்திரம் |
|---|

16. நாடகத்தின் ...................................... கூத்து ஆகும்.
17. கூத்து ஆற்றுகை இடம் பெறும் அரங்கு ...................................... ஆகும்.
18. ஆற்றுகைக் கலைகளில் ஒன்றாக ................................. காணப்படுகின்றது.
19. ஒன்றை அது போல மிக ஒத்த வகையில் மீளச் செய்வது ................................ எனப்படும்.
20. நாடகம் பற்றிய விடயங்களை கூறுவது ................................ ஆகும்.

( 20X 2= 40 புள்ளிகள்)

➢ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. (i) நால்வகைச் சித்திரிப்புக்களும் எவை?
    (ii) பாடல் ஒன்றைப் பாடும் போது அவதானம் செலுத்த வேண்டிய விடயங்கள் நான்கு தருக.
    (iii) நாட்டார் பாடல் வடிவங்கள் நான்கு தருக.

(12 புள்ளிகள்)

02. (i) குரல் வழிச் சித்திரிப்பு என்றால் என்ன?
    (ii) குரலை வெளிப்படுத்துகையின் போது கையாள வேண்டிய நுட்பங்கள் நான்கு தருக.
    (iii) ஒலிகளைப் பிறப்பிக்கக் கூடிய சூழலில் கிடைக்கும் பொருட்கள் ஐந்து தருக.

( 12 புள்ளிகள்)

03. (i) உமக்குத் தெரிந்த நாட்டார் விளையாட்டுக்கள் நான்கு தருக.
    (ii) நாட்டார் விளையாட்டுக்களை விளையாடுவதன் மூலம் கிடைக்கும் நன்மைகள் நான்கு தருக.
    (iii) நாட்டார் விளையாட்டுக்களில் காணப்படும் நாடகப் பண்புகள் நான்கு தருக.

( 12 புள்ளிகள்)

04. (i) பிள்ளை அழுத கண்ணீர் நாடகத்தின் ஆசிரியர் யார்?
    (ii) இந்நாடகத்தின் பிரதான பாத்திரம் எது?
    (iii) இந்நாடகத்தின் கரு யாது?
    (iv) இந்நாடகத்தில் வரும் பாத்திரங்களைக் குறிப்பிடுக.
    (v) இந்நாடகத்தில் வெளிக் கொண்டு வரப்படும் பண்புகள் நான்கு தருக.

( 14 புள்ளிகள்)